வீட்டு வசதி வாரியத்திடமிருந்து கிடைக்கப்பெற்ற குறிப்பிலிருந்து தென் சென்னை புறநகர் பகுதியைச் சார்ந்த சுமார் 420 ஏக்கர் நிலத்தை சென்னை மாநகர எல்லையில் சேர்க்கப்படவேண்டியுள்ளது. கோடம்பாக்கம்புதூர், தென் சென்னை நகர்ப்புறம், மேற்கு சென்னை நகர்ப்புறம், கொரட்டூர் நகர்ப்புறம் இவைகள் குறிப்பிடப்பட்டுள்ளன. தேவையான குறிப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றை ஆராய்ந்து தக்க முடிவு எடுக்கவேண்டிவரும்.

ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்களுக்கு தனி முத்திரை

* 122 வின—திரு. பி. எஸ். மணியன்: மாண்புமிகு கல்வி–உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர்களுக்கு தனியானதோர் சின்னத்தை முத்திரையாகக் கொடுக்கும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : கோவை மாவட்டத்தில் உள்ள சூலூர் ஊராட்சி ஒன்றியம், ஊராட்சி ஒன்றிய ஆணையாளருக்கும், பெருந்தலைவருக்கும், தமிழக அரசின் கோபுரச் சின்னத்துடன் கூடிய பொதுவான முத்திரையை தமிழ், ஆங்கிலம் இருமொழிகளிலும் உருவாக்கித் தருமாறு கேட்டுக் கொண்டுள்ளது. இக்கோரிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. பி. எஸ். மணியன் : இந்தக் கோரிக்கை எப்போது நிறைவேற்றப்படும்? அப்படி நிறைவேற்றப்படும்போது ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒதுக்கப்படுவதைப்போல் ஒவ்வொரு ஊராட்சி மன்றத்திற்கும் சின்னம் ஒதுக்குவது குறித்து அரசு முடிவு எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : முதலில் ஊராட்சி ஒன்றியம் பற்றி முடிவு எடுத்து விடுவோமானால் அதை நடைமுறைப் படுத்திய பிறகு ஊராட்சிமன்றங்களின் தேவை பற்றி பிறகு யோசிக்க லாம். ஊராட்சி ஒன்றியங்களுக்கு அப்படி முத்திரை வழங்குவது பற்றிய கருத்துத்தான் இப்போது பரிசீலனையில் இருந்து வருகிறது. அதுகுறித்து விரைவில் தக்க முடிவு எடுக்கப்படும்.

1972 ஆகஸ்ட் 17]

திரு. கே. என். குமாரசாமி: இப்படி தனிச் சின்னம் வழங்குவது சம்பந்தமாக மற்ற ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து ஏதாவது தீர்மானங்கள் வந்துள்ளனவா? அப்படி தனிச் சின்னம் வழங்கு வதற்கு அரசாங்கம் உறுதியாக முடிவு எடுக்குமாளுல் மற்ற கிராம பஞ்சாயத்துக்கள் கூட தனிச் சின்னம் தங்களுக்கும் வழங்கவேண்டும் என்று கேட்குமே. இப்படி ஒவ்வொன்றுக்காக தனிச் சின்னம் வழங்குகிற நிலே ஏற்படுமானுல் அது பெரும் நெருக்கடிக்கு கொண்டு விடும் என்பதை அரசு அறியுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அதுதான் பரிசிலனையில் இருந்து வருகிறது என்று சொன்னேன். உறுப்பினர் கூறுகிற கருத்துக்களை எல்லாம் ஆராய்ந்து அப்படிப் பட்ட முடிவு எடுத்தால் அதனுல் நல்ல பலன் ஏற்படும் என்று கருதினுல் அதற் கேற்ற முடிவு எடுக்கவேண்டியதுதான். ஊராட்சி ஒன்றியங்களைப் பொறுத்தவரையில் இப்படி தனியாக ஒரு சின்னம் அமைக்கப்படுமே யானுல் அவர்களை அடையாளம் கண்டுகொள்வதற்கும் அதன்மூலம் வருகிற தபால் போன்றவை வருவதற்கும் ஒரு சூழ்நிலே ஏற்படும் என்று ஒன்றியத் தலைவர்கள் சிலசமயங்களில் எடுத்து தெரிவித்திருக் கிறுர்கள். அதையொட்டி சூலூர் ஒன்றியம் கருத்து தெரிவித்திருக் கிறது. ஒன்றியத்தைப் பொறுத்தவரையில் அதுபற்றி முடிவு எடுத்தால் அதற்குப் பிறகு அதைத் தழுவி மற்றைய முடிவுகளை நாம் பரிசீலனை செய்து எடுக்கலாம்.

எழுத்தாளர்களுக்கு உதவி

* 123 விஞ—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வி–உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞவுக்கு விடையளிப்பாரா—

பழம்பெரும் எழுத்தாளர்கட்கு உதவிப் பணம் வழங்கும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: ஆம்.

திரு. என். கிட்டப்பா: இப்படிப்பட்ட பழம்பெரும் எழுத்தாளர் களுக்கு உதவிப் பணம் வழங்கும் திட்டம் இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அந்தத் திட்டம் எந்த வகை யில் உருவாக்கப்பட்டிருக்கிறது? எப்போது முதல் அது செயல் பட்டு வருகிறது என்பதை அறியலாமா?